பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 வைகாசி 6 ஜா அல்: 29 இதழ்: 97
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19-5-77

தமிழர் விடுதலைக்கூட்டணி — கம்யூ. கட்சி:

## நல்லுறவை ஏற்படுத்த உபகுழுக்கள் நியமனம்

யாழ்ப்பாணம், வியா.

மாஸ்கோ சார்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் கிளையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இரு இயக்கங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துமுகமாக உப குழுக்களை நியமித்துள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை செயலாளர் திரு. அ. வைத்திலிங்கத்தைத் தலைவராகவும் திரு. வ. பொன்னம்பலம், திரு. சிவா சுப்பிரமணியம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட உப குழுவை நியமித்திருக்கிறது.

இந்தக் குழு தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கத்தைச் சமீபத்தில் சந்தித்துப் பேசியது.

(8-ம் பக்கம் பார்க்க)

# இரு கான்ஸ்டபிள்கள் இணுவிலில் சுட்டுக் கொலை

## வேலைக்குச் சென்றவர்கள் வீதியில் பிணமானார்கள்

### இருஇளைஞர்களைத்தேடி பொலிஸ்வேட்டை

யாழ்ப்பாணம், வியாழன்

சாதாரண உடையில் வேலைக்குப் புறப்பட்டுச் சென்ற இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பிரதான வீதியில் வைத்துக் கைத்துப்பாக்கியினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் நேற்றுக்காலை சுமார் ஒன்பதேகால் மணியளவில் இணுவிலில் நடந்தது.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத் துப்பறியும் பிரிவைச் சேர்ந்த சண்முகநாதன் என்பவரும் வல்வெட்டித்துறைப் பொலிஸ்நிலையத் துப்பறியும் பிரிவைச் சேர்ந்த சண்முகநாதன் என்பவருமே கொல்லப்பட்ட இருகான்ஸ்டபிள்களுமாவர்.

சைக்கிளில் வந்த இரு இளைஞர்களே இந்த இருகான்ஸ்டபிள்களையும் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பியோடியதாகக் கூறப்படுகிறது.

இணுவிலில் காங்கேசன் துறைவீதியில் இச்சம்பவம் நடந்தது.

### ஓடத் துணிந்ததும் சூடுவிழுந்தது

இருகான்ஸ்டபிள்களும்இணுவிலில் வசிப்பவர்களென்றும் காலையில் ஒன்ருகவே வேலைக்குச் செல்பவர்களென்றும்கூறப்படுகிறது.

நேற்றுக்காலை இவர்களிருவரும் வேலைக்குப் புறப்பட்டு பஸ்தரிப்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் எதிரே இரு இளைஞர்கள் சைக்கிளில் வந்ததாகவும் சைக்கிளை நிறுத்திவிட்டு இருவரையும் நோக்கிக் கைத்துப்பாக்கியால் சுட்டதாகவும் ஒருவர்மீது சூடுவிழுந்ததும் மற்றவர் ஓட எத்தனித்தபோது அவர்மீது சூடு விழுந்ததாகவும்ஓடியவர் சிறிது தூரத்தில் ஒருகடையின் வாசலில்போய் விழுந்தாரென்றும் கூறப்படுகிறது.

### பொலிஸ் அதிபர் விரைவு

இந்த இரட்டைக்கொலை பற்றிய தகவல் கிடைத்ததுமே சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பொலிஸ் கோஷ்டியொன்றும் ஸ்தலத்துக்கு விரைந்து சென்றது. இதேசமயம் யாழ் மாவட்டப் பொலிஸ்அதிபர் திரு. ஏ.எஸ். செனிவிரத்தின, உதவிப் பொலிஸ் அதிபர் ஆகியோர் ஒரு பொலிஸ் கோஷ்டியுடன் ஸ்தலத்துக்கு விரைந்து சென்றனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, புதன்

யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஏழு இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யக்கோரி மேல்நீதிமன்றத்திற்குத் தாக்கல் செய்த ஆட்கொணர்வு ஆணைமீதான விசாரணை இம்மாதம் 24ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைமீதான விசாரணையை ஒருவாரத்திற்குஒத்திவைக்குமாறு அரச சட்டத்தரணி திரு. குலதுங்க, நீதியரசர்கள் தாமோதரம், விஜயசுந்தர, ரத்வத்த ஆகியோரிடம் இன்று கேட்டுக்கொண்டார்.

ஆணைவிசாரணை ஒத்திப்போடப்படுவது சிறப்பல்ல என்று எதிரிகள் தரப்பு சட்டத்தரணி திரு. புள்ளேநாயகம் தெரிவித்தார்.

விசாரணை இம்மாதம் 24ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ம-உ)

## டி. ஐ. ஜி. வந்தார்

### 'விசேட சி. ஐ. டி. கோஷ்டி விசாரணை வேண்டும்''

---மல்லாகம் மாவட்ட நீதிபதி

யாழ்ப்பாணம், வியா

'மல்லாகம்மாவட்ட நீதிமன்ற பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளில் சமீபகாலத்தில் நடைபெற்ற மர்மக் கொலைச் சம்பவங்கள் தொடர்பான மர்மங்கள் இன்னமும் துலக்கப்படவில்லை, பொதுமக்கள் பொலிசார் மீது கொண்டுள்ள நம்பிக்கை வலுப்படும்வகையில் விசேட சி. ஐ. டி. கோஷ்டி ஒன்று இம்மர்மக் கொலைகளின் துப்புக்களைத் துலக்க ஈடுபடுத்தப்படவேண்டியது அத்தியாவசியம்' என்று மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம்.டி. ஜேசுரட்ணம் இணுவில் மர்ம இரட்டைக்கொலை தொடர்பான மரண விசாரணையின் போது சமுகமளித்த வடமாகாணத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் மாஅதிபர் திரு. அனு செனிவரத்னவிடம் தெரிவித்தார்.

இவ்வேளை யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். செனிவரத்ன, காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஸ்மித் சில்வா ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

### துப்புத் துலங்காத மர்மக் கொலைகள்

உரும்பராய் பெற்ருேல்நிலைய அதிபர் நடராஜா கைக்குண்டு வீச்சு மர்மக் கொலை, காங்கேசன்துறை துப்பறியும்பொலிஸ் பிரிவு கான்ஸ்டபிள் கருணாநிதி துப்பாக்கிச்சூட்டு மர்மக்கொலை, சுன்ணகம் கார் கடத்தல் சம்பவத்

(8ம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம், வியா,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 6312 வாக்களிப்பு நிலையங்கள்அமைக்கப்படவுள்ளன. இதில், 6053 பொதுவாகவும் 279 பெண்களுக்காகவும் நிறுவப்படும். (கெ)

## எம் ஜி. ஆர். அருப்புக்கோட்டையில்

சென்னை. மே 18

அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அருப்புக்கோட்டைத் தொகுதியில் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

தமது வேட்பு மனுவை அவர் இன்று தாக்கல் செய்தார்.

கடந்த சட்டசபைத் தேர்தலில் பறங்கிமலைத் தொகுதியில் எம். ஜி. ஆர். போட்டியிட்டு வென்ருர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் ஜூலை 21ல் ?

கொழும்பு, புதன்.

பொதுத்தேர்தல் ஜூலைமாதம் 21ம் திகதியும் வேட்பாளர் நியமனப் பத்திரத் தாக்கல் ஜூன் மாதம் 6ம் திகதியும் நடைபெறலாம் எனத்தெரிய வருகிறது

(ம-உ)

புத்தூர் வங்கிக் கொள்ளை:

## சந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம், வியா.

புத்தூர் வங்கிக் கொள்ளை சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்ட மூன்றுசந்தேகநபர்களும் நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்படவில்லை.

14 மாதங்களுக்கு முன்னர் பட்டப்பகலில் நடந்த இந்தக் கொள்ளை சம்பந்தமாக சுங்கராஜா ஜெயசிலன், புனிதானந்தசாமி தவராஜசிங்கம், சவரிமுத்து புஷ்பகுணபாலன் ஆகிய மூவரும் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு றிமாண்டில்வைக்கப்பட்டனர்.

நேற்று அடையாள அணிவகுப்பு நடைபெற்றபோது, சாட்சிகளாக வந்திருந்த வங்கி மனேஜர், ஊழியர்கள் உட்பட பன்னிரண்டு பேரும் சந்தேக நபர்களை அடையாளம் காட்டவில்லை. இதனைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் மூவரும் ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். அடுத்த மாதம் 22ம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு யாழ். மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்களின் சார்பில் சட்டத்தரணிகள் சண்முகசுந்தரம், எஸ் கனகமநேகரன், கே. துரைரத்தினம், சிறிசிவாய ஆகிய நால்வரும் ஆஜராகியிருந்தார்கள்.

## தேர்தலில் குதிக்கும் அரச ஊழியர்கள்

யாழ்ப்பாணம், வியா.

தேர்தலில் போட்டியிட விரும்பும் அரசாங்க ஊழியர்களும், நியமன வேட்பு மனு தாக்கல் செய்யும் தினத்துக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். தொகுதியில் சுயேச்சை வேட்பாளர்

பிரசித்தி பெற்ற தனியார் மருத்துவ மனை உரிமையாளரும் முன்னுள் மாநகரசபை உறுப்பினரும், அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் செயற் குழுவின்நீண்ட கால உறுப்பினரும், சிறந்த சமூக சேவையாளருமான

வைத்திய கலாநிதி ஏ. எஸ். ஏபிரகாம் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைகளுக்கு அமைவாக எதிர்வரும் இலங்கைத் தேசிய அரசுப பேரவைப் பொதுத் தேர்தலில் யாழ் தொகுதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக முன்வர தமிழ்க் காங்கிரஸ் தலைமைப் பீடம் ஊடாக கூட்டணிக்கு விண்ணப்பித்து அது மறுக்கப்பட்டமையால் சுயேச்சை அபேட்சகனுக போட்டியிட முன் வந்து வாக்காளரை நேரில் சந்தித்து வருகின்ருர். 3223

## நியூ பிறில்லியன் கல்வி நிலையம்

(பதிவு இல. 10069)

### தமிழ், ஆங்கில, சிங்கள, தட்டெழுத்து, சுருக்கெழுத்து

பகல்நேரம்/விடுமுறை நாட்களில்

நவீன இயந்திரங்கள், திறமையான ஆசிரியர்கள்

### வெல்டிங் டிப்ளோமா

வேறு இடங்களில் அரைகுறையாகப் பயின்றும்

காஸ் வெல்டிங்

பயிலாமல் இருப்போரின் வேண்டுகோளுக்கிணங்க விசேட சலுகை வகுப்புகள்

**21-5-77 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு**

### பாலன் இரும்புத்தொழிற்சாலையில்

ஆரம்பமாகிறது.

எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

### திருத்தணிகை,

284, பலாலி வீதி, கந்தர்மடம்; - யாழ்ப்பாணம்.

வேலை நேரங்களில்;

### பாலன் இரும்புத் தொழிற்சாலை,

(சிவதொண்டன் நிலையத்தின் முன்பாக)

409, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

---

### சுன்னுகம் பல. நோ. கூ. சங்கம்

(வரையுள்ளது) சுன்னுகம்.

## வெற்றிடம்

### கணக்குப் பதிவாளர் பதவி தரம் II (நிரந்தரம்)

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வசிப்பிடத் தகைமைகள்: குறைந்தளவு இரண்டு வருடமாவது யாழ். மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வயது: 3-6-77இல் 20க்கும் 35க்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும். (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது)

சம்பளம்: 250/- — 425/- ........................ 10×10, 12·50×6

கல்வித் தராதரம்: 1. கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (உயர்தரச்) சித்தியும் 2 வருட கால அனுபவமும்

அல்லது

2. நான்கு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (உயர்தர) சித்தியும் கூட்டுறவு வேலையாளர் சாதாரண தராதரப்பத்திரமும், ஒரு வருட கால அனுபவமும்.
3. க/கு எழுதுநர் சேவையின் தரம் 1 பதவியில் பெற்றுள்ள மூன்று வருட கால அனுபவம்.

### விண்ணப்ப முடிவுத் திகதி: 3-6-1977

கூட்டுறவுச் சங்கமொன்றில் க/கு வைத்தல் தொடர்பாகக் கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் இதற்கெனக் கூட்டுறவுச் சங்கத்தினுல் விதியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, 'பொதுமுகாமையாளர், சுன்னுகம் பல. நோ. கூ. சங்கம், சுன்னுகம்' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சகல விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் ரூபா 1/-க்கான தபால்கட்டளை அல்லது காசுக்கட்டளையுடன் முத்திரையொட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட கடித உறையையும் அனுப்பி தபாலிலோ அல்லது நேரிலோ பெற்றுக்கொள்ளலாம். காசுக்கட்டளை அல்லது தபால்கட்டளையாவும் சுன்னுகம் பல. நோ. கூ. சங்கம் என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

**பல. நோ. கூ. சங்கம்,**

**சுன்னுகம்.**

6214

---

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

வெல்டிங் (Electric & Gas மூன்று மாதம், இலெக்றிக் வயறிங் மூன்று மாதம், ரேடியோ ஆறு மாதம் காலை, பிற்பகல், மாலை நேர வகுப்புகள் எமது N.I.E.T. டிப்ளோமா பெற்று வெளிநாடுகளில் ஏராளமானோர் வேலை பார்க்கிருர்கள். National Institute of Engineering Technology மைற்மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

6210

---

**செ. புண்ணியமூர்த்தி**
சட்டத்தரணி,
அளவெட்டி.

283-ம் பிரிவின் கீழான

### இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

வலயம்: யாழ்ப்பாணம்
இல: 205

தையிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வல்லிபுரத்தின் மரணசாதனம் எழுதப்பபடாத சொத்துக்கள் சம்பந்தப்பட்டவை.

காலஞ்சென்றவர் கந்தையா பாலசுப்பிரமணியம்பெண் தேவி மனேன்மணி, தையிட்டி.

விண்ணப்பகாரி

எதிராக

1. கந்தையா பாலசுப்பிரமணியம்
2. வல்லிபுரம் கைம்பெண் இராசமணி என்னும் இராசம்மா தையிட்டி.

பிரதிவாதிகள்

1975-ம் ஆண்டு மார்கழி மாதம் 3-ந் திகதியைக் கொண்ட 281-ம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் உறுதிக்கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப் பட்டுள்ளதென திருப்தியடைந்ததின் பேரில் யாழ்ப்பாண நீதிபரிபாலன தத்துப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பேரில்.

1976-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 30-ந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பாக எவராவது ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச் சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பதாரரோ காலஞ்சென்றவரின் நெருங்கிய உறவினர் என்ற வகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுகிறதென்னும் கட்டளையிடுகின்றேன்.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை**
தத்துவப்பத்திர அதிகாரி,

யாழ்ப்பாணம்.

காரணம் காட்டும் திகதி 14-3-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை**
தத்துவப்பத்திர அதிகாரி.

காரணம் காட்டும் திகதி 3-6-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி,

6199 யாழ்ப்பாணம்.

---

### தேவை

வரைதலில் நல்ல அனுபவமுள்ள பெண்கள் தேவை. சான்றுப்பத்திரங்களுடன் உடனே நேரில் மனுச்செய்க. அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

6220

---

## "மூதறிஞர் வழி செல்வோம்"

தெல்லிப்பழை, புதன்

"ஈழத்துக்காந்தியாகவும் எம்மினத்தின் தந்தையாகவும் விளங்கிய மூதறிஞர் செல்வாவின் இழப்பு, இந்தநாட்டு மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எம்மினம் இன்று சுக்கானை இழந்த படகு போல் தவிக்கும் நிலையில் உள்ளது"

ஏழாலை கட்டுவன் தெற்கு-மேற்கு பாரதி சனசமூகநிலையத்தினர் மூதறிஞர் செல்வாவின் மறைவையொட்டி நடாத்திய அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய நிலையச் செயலாளர் திரு. மூ. தருமமூர்த்தி பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில் "அமரர் செல்வா எமது கிராமத்தில் நடைபெறும் எந்த நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி எமக்கெல்லாம் நல்ல அறிவுரைகளை வழங்கினர். எமதுகிராம முன்னேற்றத்துக்கு அளப்பரிய உதவிகளைச் செய்தார். அவர் எமதுஇனத்துக்கு விட்டுச் சென்ற இலட்சியப்பாதையில் நாம் தொடர்ந்து சென்று அந்த இலட்சியம் நிறைவேறப் பாடுபடுவோம் இதுசத்தியம்' என்ருர்.

மற்றும் திருவாளர்கள் ந. கிருஷ்ணமூர்த்தி, வி. தனபாலசிங்கம், சு. திருச்செல்வம் ஆகியோரும் பேசினர்.

காங்கேசன்துறைத் தொகுதிக்கு திரு. அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டதையிட்டு ஆதரவு தெரிவித்தும் அவருக்கு நிலையக் காரியதரிசி திரு. தருமமூர்த்தி செய்தியொன்று அனுப்பிவைத்துள்ளார்.

---

### கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம், வியாழன்

மல்லாகம் மகாவித்தியாலயத்தின் 4 ம், 5 ம் வகுப்பு மாணவ, மாணவிகள் நேற்றுக் கல்விச்சுற்றுலா மேற்கொண்டனர். பதில் அதிபர் திரு. இ. ஆனந்தசுந்தரம் தலைமையில் இவர்கள் யாழ்ப்பாணத்தின் முக்கியஇடங்களையும் தொழில் நிறுவனங்களையும் பார்வையிட்டனர். 'ஈழநாடு' காரியாலயத்தையும் இவர்கள் பார்வையிட்டனர். இச் சுற்றுலாவில் ஆசிரியர் திரு. ஐ. பாலசுப்பிரமணியம், ஆசிரியைகள் திருமதிகள் தவமலர், அருளையா, உத்தமிப்பிள்ளை கந்தசாமி, செல்வி ஞானலட்சுமி நமசிவாயம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(அ)

---

### சீமெந்தின்விலை திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வியா.

நாட்டில் நிலவும் சீமெந்து தட்டுப்பாடு காரணமாகவும் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை முகாமைப்பிரிவு சீமெந்து விநியோகத்தைத் தற்காலிகமாக நிறுத்தியதாலும் சீமெந்தின் விலை 40 ரூபாவாக அதிகரித்துள்ளது.

(கெ)

---

## விலை குறைப்பு

### சித்திராலயா ஸ்ருடியோ

18, ஸ்ரான்லிரோட் - யாழ்ப்ப...

தொலைபேசி: 522

| அளவு | பிரதி எண்ணிக்கை | பழையசலார் | புதியசலார் |
| --- | --- | --- | --- |
| 10''×12'' (குரூப்) | 02 | ரூபா 110-00 | ரூபா 100-00 |
| $4\frac{3}{4}$''×$6\frac{1}{2}$'' (கபின்/குரூப்) | 02 | ரூபா 35-00 | ரூபா 31-50 |
| போஸ்காட் $3\frac{1}{2}$''×$5\frac{1}{2}$'' | 02 | ரூபா 14-00 | ரூபா 12-50 |
| பாஸ்போட் $2\frac{1}{4}$''×2'' | 02 | ரூபா 7-00 | ரூபா 6-25 |

6216

---

### முக்கிய அறிவித்தல்

திரு. து. நடராஜபிள்ளை (கணக்கப்பிள்ளை)

என்பவரிடம் செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நாமோ எமது ஸ்தாபனமோ பொறுப்பாளிகளில்லையென்பதை இத்தால் அறியத்தருகின்ருேம்.

உரிமையாளர்:

**சி. எஸ். கே. ஓயில் மில்ஸ்,**

**யாழ்ப்பாணம்.** 6218

---

## கமக்காரர்களுக்கு ஓர் நற்செய்தி

### நீர் இறைக்கும் யந்திரங்களை திருத்துவதற்கு சிறந்த இடம்

### சங்கானை ப. நோ. கூ. சங்கம்

நீர் இறைக்கும் இயந்திர உற்பத்தியாளர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அனுபவமிக்க தொழில் வல்லுனர்களைக் கொண்டு

**உடனுக்குடன் திருத்தவேலைகள் செய்துகொடுக்கப்பெறும்.**

உப உறுப்புகள் நிதானமான விலையில் இயந்திரங்களுக்கு பொருத்திக் கொடுக்கப்பெறும்.

விபரங்களுக்கு:

**சங்கானை பல. நோ. கூ. சங்கம்,**

**சங்கானை.**

6144

# எம்.பி.க்களுக்கு பென்ஷன்: அதிகார துஷ்பிரயோகம்!

## எம். ஜி. ஆர். கட்சியுடன் தேர்தல் உறவு முறிந்தது

சென்னை, மே. 18

எம். ஜி. ஆரின் அ. இ. அ. தி. மு. க. வுடன் கொண்டிருந்த தேர்தல் உடன்பாட்டை அகில இந்திய போர்வார்ட் புளக் தமிழ்நாட்டுக் கிளை முறித்துக் கொண்டுவிட்டது என்று அதன் தலைவர் திரு ஆண்டித்தேவர் அறிவித்துள்ளார்.

தொகுதி ஒதுக்கீடு குறித்தே இவ்விருகட்சிகளுக்கு மிடையே ஏற்பட்டிருந்த உறவு முறிந்தது.

கடந்த 71ம் ஆண்டு சட்டசபைத்தேர்தலில் தி. மு. க. வுடன் இணைந்துபோட்டியிட்ட போது தமது கட்சி போட்டியிட்ட 9 தொகுதிகளைத் தரும்படி போர்வார்ட்புளக் கேட்டதாகவும் 3 தொகுதிகளை மட்டுமே அ. இ. அ. தி. மு. க கொடுக்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே 9 தொகுதிகளைத் தருவதாக உறுதியளித்த அ. இ அ. தி மு.க. பின்னர் ஏமாற்றிவிட்டதாகவும் திரு. ஆண்டித்தேவர் கூறினார். (இ)

பொது நலஅமைப்பு மகாநாடு:

## இடிஅமின் பங்குபற்றுவதற்கு 15 நாடுகள் ஆட்சேபம்

லண்டன், மே 18

அடுத்த மாதம் லண்டனில் நடைபெற உள்ள பொதுநல அமைப்பு நாடுகளின் மகாநாட்டில் உகண்டா ஜனாதிபதி ஜெனரல் இடிஅமின் கலந்து கொள்ளக் கூடாது என்று 15பொதுநலஅமைப்புநாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளதாக லண்டனில் தெரிவிக்கப்பட்டது.

இடிஅமின் பொது நல அமைப்புக்கு விரோதமான நடவடிக்கைகளைமேற்கொண்டு வருவதாலேயே இக்கருத்து மேலோங்கி வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் பொதுநல அமைப்பு நாடுகள் நிறுவனத்தில் உகண்டாவும் அங்கம் வகிப்பதால் அங்கத்துவ நாடு ஒன்றின் ஜனாதிபதி என்ற ரீதியில் ஜெனரல் இடிஅமின் கலந்து கொள்வதில் தவறில்லை என்று வேறுபல அங்கத்துவ நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன. (இ)

## மகப் பேற்றுக்கு 1000 டாலா

வாஷிங்டன், மே 18

அமெரிக்க வைத்தியசாலைகளில் சிகிச்சைக் கட்டணங்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன என 'நாஷனல் ஸ்டார்' பத்திரிகை எழுதியுள்ளது. (6-ம் பக்கம் பார்க்க

## காங்கிரஸுடன் உறவு: கம்யூ. தலைவர் ராஜினமா

புதுடில்லி, மே. 18

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான எஸ் எம் பனர்ஜி தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார். மக்களின் நம்பிக்கையை இழந்த காங்கிரஸ் கட்சியுடன் (6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டில் பிரதமர் மொரார்ஜிதேசாய்கண்டனம்

சென்னை, மே. 18

லோகசபை, ராஜ்யசபை உறுப்பினர்கள், சட்டசபை உறுப்பினர்களுக்கான பென்ஷன் வழங்குவது அரசுக்கு மக்கள் வழங்கிய அதிகாரத்தைத் தவறாகப் பயன் படுத்தும் செயலாகும்' என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

அவர்களுக்குபென்ஷன்வழங்கப்பட்டால் அதை லஞ்சம் என்றும் கருதலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

சென்னையிலும் திருச்சியிலும் ஜனதா கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்ட திரு. மொரார்ஜி, ரயில்மூலம் சேலம் சென்று அங்கும் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ராஜ்பவனத்திலும் பிரதமர் தமிழ்நாடு கவர்னரையும் அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்து உரையாடினர்.

திரு. மொரார்ஜி தேசாய் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'நிர்வாகத்தில் உள்ளகுப்பை கூழங்களை அகற்றவேண்டியிருப்பதால் புதிதாக எதையுமே விரைவாகச் செய்யமுடியவில்லை.

'அரசாங்க ஊழியர்கள் அரசியல்கட்சிக்குப் பாதகமாகவோ சாதகமாகவோ பணியாற்றக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளோம். அந்த உத்தரவுப்படியே அவர்களும் நடந்துவருகின்றனர்.

'நாட்டிலுள்ள முறைகேடுகளைத் தடுக்க தேர்தல் சீர்திருத்தங்கள் செய்யப்பட உள்ளன'

'எதிர்வரும் தேர்தல்களில் ஜனதாகட்சிவேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை அரசு ஏற்றுக்கொள்ளும். ஆனல் குறிப்பிட்டவேட்பாளர்அந்தத்தேர்தலில் தொகுதியின் மொத்த வாக்குகளில் எட்டில் ஒருபங்கு வாக்குகளைப் பெருவிடின் அவரிடமிருந்து தேர்தல் செலவுத் தொகை திரும்பவும் வசூலிக்கப்படும்.

### 'அறிவாளிகளிடம் கருத்து' வேறுபாடு தவிர்க்க முடியாதது

'ஜனதா கட்சிக்குள்ஒற்றுமை கிடையாது. அக்கட்சி விரைவில் அழிந்துவிடும் என்று பலர் கூறுகிறார்கள்.

'ஆனல், ஒன்று மட்டும் உண்மை. அறிவாளிகளிடையே கருத்து வேறுபாடு இருக்கவே தான்செய்யும் அது தவிர்க்க முடியாதது. ஆனல்நாம்அனைவரும்ஒன்றுபட்டு உழைக்கத் தீர்மானித்துவிட்டோம்.

'அடுத்தமாதம் சட்டசபைத் தேர்தல்கள் முடிவுற்றபின்னர் எல்லாம் சரியாகிவிடும். (இ)

## தவறு செய்பவர்கள் பிரதமராயினும் தண்டனையிலிருந்து தப்பமுடியாது

### மதுரையில் பிரதமர்

மதுரை, மே 18

'தவறுசெய்பவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும். பிரதம மந்திரிகூட இதற்கு விதிவிலக்கல்ல' என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் இன்று மதுரையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

'ஜனதா அரசு இந்தியை தமிழ்நாட்டில் திணிக்கும் என்பது பொய்ப்பிரசாரம்' என்றார் அவர். (உ)

திருமதி இந்திராவின்

## தேர்தல் கூட்டச் செலவை தமிழ்நாடு அரசு கோருகிறது

### காங்கிரஸ் கட்சி பரிசிலனை

சென்னை, மே. 18

திருமதி இந்திராகாந்தி நடந்துமுடிந்த லோகசபைத் தேர்தலில் தமிழ்நாட்டில் கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக்கூட்டங்களுக்கான செலவுத்தொகையைச் செலுத்துமாறு தமிழ்நாடுஅரசு, காங்கிரஸ்கட்சியைக் கேட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற லோகசபைத் தேர்தலை முன்னிட்டு திருமதி இந்திராகாந்திதமிழ் நாட்டில் பலதேர்தல்பிரசாரக்கூட்டங்களில் கலந்துகொண்டார். இக்கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபா செலவிடப்பட்டது.

இக்கூட்டங்களுக்கான செலவுதொகையான 69 ஆயிரம்ருபாவைச் செலுத்துமாறு தமிழ்நாடு அரசு காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டு தலைமைப் பீடத்தைக் கோரியுள்ளது.

இவ்விஷயம்பற்றி காங்கிரஸ் தலைமைப்பீடம் பரிசீலித்துவருகிறது என்று காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (இ)

### ரூ. 60 ஆயிரம் செலவில் இந்திராவுக்கு மேடை

சென்னை மே. 18

இந்திராகாந்தி தமிழகத்திற்கு விஜயம் செய்தபோது இருகாங்கிரஸுகளையும்இணைப்பதற்காக நடந்தகூட்டத்திற்கு மேடை அமைக்க 60,190 ரூபா செலவிடப்பட்டுள்ளதாம்.

நாடாளுமன்றக்குழு விவகாரக்குறிப்பிலிருந்து இவ்விவரம் தெரியவந்துள்ளது.

மேடை அமைத்தது, ஒலி பெருக்கி பூட்டியது, சவுக்கு மரங்களை அடுக்கி வேலிஅமைத்தது போன்றவற்றுக்கே இப் பெருந்தொகையான பணம் தமிழகஅரசால் செலவிடப்பட்டுள்ளதாம். (கி-இ)

## திரைப்படத்துறைநெருக்கடி ஆராய குழு நியமனம்

### சிவாஜி, சுந்தரராஜன் அங்கம் வகிக்கின்றனர்

சென்னை, மே 18

தென்னிந்திய திரைப்படத் துறையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள்பற்றி ஆராய்வதற்காக 12 உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி ஒன்றை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

இக்கமிட்டியில் நடிகர்திலகம் சிவாஜிகணேசன், மேஜர் சுந்தரராஜன், ஏ. எல். ஸ்ரீநிவாசன் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

தென்னிந்தியத் திரைப் படத் துறையில் ஏற்பட்ட பல பிரசனைகளை அடுத்து சில ஸ்ருடியோக்கள் மூடப்பட்ட நிலையே அங்கு பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. (இ)

### உற்சவம்

யாழ்ப்பாணம், வியாமாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் இம் மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 31ம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (அ)

### எம். ஜி. ஆரின் பெயர் இல்லை

சென்னை, மே 18

எம். ஜி. ஆரின் அனைத்திந்திய அண்ணு திராவிடமுன்னேற்றக் கழகத்தின் மூன்ருவது அபேட்சகர்கள் பட்டியலிலும் பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் பெயர் வெளியிடப்படவில்லை.

நேற்றுமாலை இப்பட்டியல் வெளியிடப்பட்டது. (இ)

## மணிவாக்கு

ஒருவருடைய பெருந்தன்மை அவருடைய இருதயத்திலன்றி புத்தியாகிய விவேகத்திலல்ல.

— காந்திமகான்.


# ஈழநாடு
THE EELANAADU


## ஒழுக்கமும் கட்டுப்பாடும்

நாட்டில் அமைதியையும் கட்டுப்பாட்டையும் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் கட்டிக்காக்க வேண்டுமெனப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று நாட்டில் ஒழுக்கக்கேடு, கட்டுப்பாடு சீர்குலைவு, கீழ்ப்படியாமை ஆகிய இயல்புகள் தலைதூக்கியுள்ளனவென்றும் இதற்கு அரசியல்கட்சிகளும் காரணமாகுமென்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

ஏலப்பொலையின் மகன் மத்தும பண்டார உயிர் துறந்த மே 17-ம் திகதியை சிறுவர் தினமாகப் பிரகடனப்படுத்தி பண்டாரவின் சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

நாட்டில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் சீர்குலைந்துள்ளதென்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கின்றனர்.

இதற்கு அரசியல் கட்சிகளும் காரணம் என்று ஓர் அரசியல் தலைவியான பிரதமரே ஒப்புக்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது.

எங்கும் எதிலும் அரசியல் நுழைந்துவிட்டது. தகுதியடைப்படையில் எந்தத் துறைக்கும் நியமனங்கள் நடைபெறுவது அபூர்வமாகிவிட்டது. எந்தக் கட்சி ஆட்சிபீடத்துக்கு வந்தாலும் கட்சிக்காரர்களுக்கும் கட்சிக்காரர் சிபார்சுசெய்பவர்களுக்குமே உத்தியோகமோ தொழிலோ கிடைக்கும்.

கல்விக்கூடம்தான் வருங்கால நற்பிரஜைகளை உருவாக்கும் நிலையம். இங்கு நல்ல ஆசான்களிருந்தால்தான் பிள்ளைகளுக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு, கீழ்ப்படியும் இயல்பு ஏற்படமுடியும்.

நமது நாட்டில் இந்தப் பண்பை அளிக்கக்கூடிய ஆசான்கள் இன்று எத்தனை பேர் உள்ளனர்?

சமயத் தலைவர்கள் பலரும் கட்சி அரசியலில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களும் கட்சி அரசியல்முறையில்தான் சிந்திக்கிறார்கள்.

சமூகத் தலைவர்கள் பலரும் கூட இதேநிலைதான். சமூகசேவையென்று பணிபுரியத்தொடங்குபவர்களுக்கும்பின்னர்பார்லிமெண்டுக்குப் போக ஆசைவந்துவிடுகிறது.

எந்த நியமனத்துக்கும் அரசியல்வாதிகளின்சிபார்சுகள் தேவையென்றால் நியமனம் எல்லாமே நேர்மையாக நடைபெறுமா?

நேர்மையில்லாவிடில் கட்டுப்பாடு, ஒழுக்கம், கீழ்ப்படியும் இயல்பு ஆகிய பண்புகளுக்கு எப்படி இடமிருக்கும்.

தேர்தல் பிரசாரத்துக்கு மாணவர்களையும் சிறுவர்களையும் தொழிற்சங்கங்களையும் பயன்படுத்துவதும் கட்டுப்பாடின்மைக்கு ஒரு காரணமென்று கூறலாம்.

நாட்டில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் கீழ்ப்படியும் இயல்பு ஆகியபண்புகளைக் கட்டிக் காப்பதற்குத் தலைவர்கள் வழிகாட்ட வேண்டும்.

எனவே தேர்தல் வரவிருக்கும் இச்சமயத்தில் அரசியல் வாதிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சகல அரசியல் கட்சியினரும் சேர்ந்து தமக்குள் நெறிமுறைக் கோட்பாடு ஒன்றை வகுத்துக் கொண்டால் பயனளிப்பதாக இருக்கும்.

## நவீனசந்தை கடைக் காரருக்குச் சலுகை

### விசேஷ ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாண நகர நவீன சந்தையில் கடைவைத்திருப்பவர்களின் ஒப்பந்த காலம் இம் மாதம் 31ந் தேதியுடன் முடிவடைகிறது. புதிதாகக்கேள்விப் பத்திரம் கோராமல் கடைக்காரர்களின்நலனை உத்தேசித்து அவர்களுடைய ஒப்பந்த காலத்தை இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி அடுத்த ஒப்பந்த காலம் ஏழுவருடமாகும்.

கடைக்காரர்கள் கடைஎடுக்கும் போது இரண்டு வருட வாடகை முற்பணமாகச் செலுத்தவேண்டும். இதற்குப் பதிலாக இப்போது கடைக்காரர் கடைவாடகையில் ஐம்பது விகிதத்தை கூடுதலாக வாடகையாகச்செலுத்தவேண்டும். கண்டி மாநகரசபையும் இதே முறையையே பின்பற்றுவது குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி ஆணையாளருடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்தப் புதியமுறையை யாழ். மாநகர விசேஷ ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசப் அறிவித்துள்ளார்.

### யாழ். நகரில் மின்விநியோகம்

யாழ். நகரில் மின்சார விநியோகத்தைச் சீராக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகரின் முதலாம், இரண்டாம், மூன்றாம், குறுக்குத்தெருவிலுள்ள மின் கம்பிகள் மிகப் பழமையானவையென்றும் அவற்றை அகற்றிவிட்டு பதிலாக மூன்றுபேஸ் மின்கம்பி இணைக்கப்படவிருப்பதாகவும் விசேஷஆணையாளர் தெரிவித்தார்.

நகரில் ஏழு உபமின் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவைகளில் நான்கு முடிவடைந்துள்ளன. உபமின்நிலையங்கள் யாவும் பூர்த்தியடைந்து இயங்கத் தொடங்கினால் நகரவீதிகளும், வீடுகளும் பிரகாசமாகிவிடும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் விசேஷ ஆணையாளர் திரு. ஜோசப்.

### நகரவீதிகள்

நகரிலுள்ள பதினைந்து வீதிகள் உடனடியாகத் திருத்தப்படவிருக்கின்றன. சில வீதிகளில் நடைபாதைகளும் அமைக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. துரையப்பா வீதியில் நடைபாதை அமைக்கப்படுவதுடன் முனீஸ்வரன் வீதியும் திருத்தப்படுமென்றும் விசேஷஆணையாளர் தெரிவித்தார்.

## 'ஜனதா' சமுதாய இணைப்பு கல்வித் திட்டம்

[இன்று மாலை கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலையில் ஜனதா கல்வித் திட்டத்தின் தொடக்கவிழாநடைபெறுகின்றது]

இன்று இந் நாட்டிலே படித்துவிட்டு வேலையின்றித் தவிக்கும் இளைஞர் பலர் இருக்கின்றனர். குறிப்பாக, பாடசாலைகளினூடாகப் பொதுப்பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபெறுதநிலையில் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காது அலையும் பலரை நாம் காண்கின்றோம். முன்னையவரிலும் பின்னவர்களே தாம் வாழும் சமுதாயத்திற்குப் பெரும் பிரச்னைகளை உண்டாக்கித் தாமும் பெருங் கவலையிலே மூழ்கி வாடுகின்றனர்.

இவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் நிவாரணமளித்து, தன்னம்பிக்கையையூட்டி, வாழ வழிவகுத்துக் கொடுக்கக் கல்வியமைச்சு வகுத்துள்ள திட்டமே 'ஜனதா' சமுதாய இணைப்புக் கல்வித் திட்டமாகும். பாடசாலைகளிலே தொடர்ந்து கல்விகற்கும் வாய்ப்பினை இழந்து வீடுகளிலிருக்கும் மாணவர்களுக்கு மாலை வேளைகளில் அவர்களின் சூழலிலுள்ள கலாசாலைகளிலே பயனுள்ள சில பயிற்சிநெறிகளை வழங்குவதே இத்திட்டத்தின் முதன்மையான நோக்கம். இது ஒரு நல்ல சமுதாயப் பணி.

இந்தப் பணியிலே தனது பங்கையும் வழங்க, கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை முன்வந்துள்ளது.

இத் திட்டப் பயிற்சிநெறியின் தொடக்கவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு, ஆசிரியகலாசாலையில், கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அவர்களைப் பிரதம விருந்தினராகக்கொண்டு நிகழும். கலாசாலைக் கவின் கலைப்பயிற்சியாளரின் கலை நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெறவிருக்கும் சிறப்பம்சம்.

தொடக்கவிழாவையடுத்துக் கிழமை நாட்களில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 5 மணி வரை நாள்தோறும் சித்திரம், கைப்பணி, மனையியல், நடனம், சங்கீதம் ஆகிய துறைகளிலே கலாசாலை விரிவுரையாளர்களாலும், ஆசிரிய மாணவர்களாலும் வகுப்புகள் நடாத்தப்படவிருக்கின்றன. 16-18 வயது ஆண்களும், 16-21 வயதுப் பெண்களும் (பாடசாலையிலிருந்து விலகியவர்களும் கோப்பாய் மாவட்டத்தில் வாழ்பவர்களும்) இப்பயிற்சியை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். காலப்போக்கில் சாரணியம், முதலுதவி ஆகியவற்றிலும் பயிற்சிஅளிக்கத் திட்டம் உள்ளது. இந்தத் திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமையுமென முழுமனதுடன் நம்புகிறோம்.

— க. சொக்கலிங்கம் —

செயலாளர் ஜ. ச. இ. கல்வித்திட்டச் செயற்குழு,
கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலை

ஆசிரியருக்குக் கடிதம்:

## மூதறிஞர் நினைவாலயக் குழுவினர் கவனத்திற்கு

மூதறிஞர் செல்வாவின் இறுதிக் கிரியைகளின்போது ஏற்பட்ட எழுச்சி, திரண்ட மக்கள் வெள்ளம், கறுப்புக் கொடிகள், அஞ்சலிப் பிரசுரங்கள். அழுகை ஒலிகள். கவலைதோய்ந்த முகங்கள் என்றுமே நினைவை விட்டகலாதவை.

ஆனால் அவர் பூதவுடல் தகனஞ் செய்யப்பட்ட இடத்தை இன்று பார்க்கும் போது அவையெல்லாம் கனவு போலவும் பொய்போலவுமே தோன்றுகின்றன.

தந்தை செல்வாவின் பூதவுடல் தகனஞ் செய்றப்பட்ட இடம் புனிதமாகப் பேணப்படவேண்டும். ஒரு காய்ந்த மலர்வளையத்தைத் தவிர அவ்விடத்தில் வேறெதுவும் நினைவாக இல்லை. மக்கள் பார்த்தவுடனே அந்த இடத்திற்கு மதிப்பளிக்கும் மனம் வரக் கூடியதாக எதுவும் இல்லை. ஒரு லட்சம் ரூபா செலவில் நினைவுமண்டபம் கட்டப் போகின்றோமே சில நூறு ரூபாய் உடனடியாகச் செலவழித்து அந்த இடத்தில் சிறுமேடை ஒன்றுகட்டவேண்டாமா? அல்லது ஒரு சலாகை வேலியாவது அமைக்கக் கூடாதா? நினைவாலயக் குழுவினர் இதைக்கருத்தில் கொள்வார்களாக.

நினைவாலயம் ஓராண்டிற்குள் கட்டப்பட வேண்டும் என்ற திட்டம் இருக்கலாம் என்றாலும் வேலைகள் தொடங்கப்படும்வரை இந்த இடத்தை புனிதமாகப் பேண ஆவன செய்யப்பட வேண்டும்.

எஸ். பி. கிருஷ்ணன்
தென் மட்டுவில்.

## 145 தொகுதிகளில் ஐக்கிய முன்னணி

கொழும்பு, புதன்

ஐக்கிய சோஷலிஸ முன்னணி, 145 தொகுதிகளில் போட்டியிட முடிவுசெய்துள்ளது! "லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஜனநாயகக்கட்சி ஆகியவற்றைக் கொண்ட ஐ. சோ. முன்னணி ஏற்கனவே 135 தொகுதிகளுக்கான முடிவுகளைச் செய்துவிட்டது. மேலும் பத்துத் தொகுதிகள் சம்பந்தமாக மட்டுமே முடிவுகாணவேண்டும்" என்று முன்னணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## ஆசிரியர்நியமனம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், வியா.

வடபிராந்திய கல்விப்பகுதிக்குட்பட்ட சகல தொகுதிகளிலும் 190 பேர், தராதரப் பத்திரமற்ற உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தொகுதிகளும் 15 பேர் விதமும் நல்லூருக்கு 23 பேரும், கிளிநொச்சிக்கு 47 பேரும், நியமனம் பெற்றுள்ளனர்.

கல்விப்பகுதி, வடபிராந்திய கல்விஅதிகாரி, திரு. சிவநாதனைப் பணித்ததலை பேரில் ஆசிரியர் பற்றுக்குறை நிலவும் கஷ்டப்பிரதேசங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அவரது மேற்பார்வையின் கீழ் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் நியமனப்பாடசாலைகள் வழங்கப்பட்டன. இந்நியமனங்களில் 3 கஷ்டப்பிரதேச ஆசிரியர்களும் அடங்குவர். பெரும்பாலான விண்ணப்பதாரிகள் நல்லூர், கிளிநொச்சி, வட்டுக்கோட்டை பகுதிகளைச்சேர்ந்தவர்களாக இருந்தனர். (கெ)

## கட்டிடஉரிமையாளர் மீது வாடகைக் குடியிருப்பாளர்புகார்

யாழ்ப்பாணம், வியா

நீண்ட காலமாக வாடகைக்கு இருந்து வந்த ஒருவரை கட்டிடத்தைத் திருத்தஞ் செய்துதருவதாக உறுதிகூறி குடிஎழுப்பிவிட்டு, கட்டிடம் திருத்தஞ் செய்யப்பட்டபின் அதனைக் கொடுக்கமறுத்ததாகக் கூறப்படும் ஒரு கட்டிட உரிமையாளர்மீது யாழ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள ஒரு கட்டிடத்தின் உரிமையாளரான சிவலிங்கத்துக்கு எதிராக சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்த புகார் மீது தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. மா. இராசத்தினம் விசாரணை நடத்தியபோது, கட்டிட உரிமையாளர் குற்றவாளியாகக் காணப்பட்டு குறிப்பிட்ட கட்டிடத்தை பிரஸ்தாப வாடகைக்குடியிருப்பாளரிடம் ஒப்படைக்குமாறு தீர்ப்பளித்து அதற்கென ஒரு கால எல்லையும் நிர்ணயித்திருந்தார்.

குறிப்பிட்ட திகதிக்குள் கட்டிடம் வாடகைக் குடியிருப்பாளரிடம் கொடுபடாததால் வீடமைப்பு உதவி ஆணையாளர் தமது தீர்ப்பை ஊர்ஜிதம் செய்து தீர்ப்பளிக்குமாறு கோரி யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (ஆ)

## கீரிமலையில் இன்று

யாழ்ப்பாணம், வியா,

கல்கிபகவான் ஜயந்தி விழா இன்று கீரிமலை கிருஷ்ணர் ஆலயத்தில் நடைபெறுகிறது. விசேஷ பூசைகளும் ஆராதனைகளும் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும். (அ)

## யாழ்/லங்கா ஆயுர்வேதக் கல்லூரியில்

# அங்கீகாரம் பெறுதவர் உண்டு என்று சட்டம் சொல்லுகிறது

## கெங்காதரனுக்கு மருதையினர் பதில்

நண்பன் கெங்காதரனல் எனது அறிக்கையில் சொல்லப்பட்ட எல்லா விபரங்களுக்கும் பதில் கொடுக்க முடியவில்லை. அவர் கொடுத்த பதில்களும் திருப்தியானவை அல்ல.

**(1) இக்கல்லூரியில் அங்கீகாரம்பெருத பட்டதாரிகள் விரிவுரையாளர்களாக இல்லை:-**

### அங்கீகாரம்

அங்கீகாரம் என்பது அரசாங்கத்தால் வர்த்தமானிகள் மூலம் வெளியிடப்படும் ஒரு பொது நிகழ்ச்சி. எனவே லங்கா ஆயுர்வேதக் கல்லூரிக்கு இலங்கை வர்த்தமானி இலக்கம் 10270, திகதி 13-7-51 மூலம் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அரசாங்கம் ஒரு கல்வி நிலையத்தை அங்கீகரிக்கும்போதும் அங்கீகாரத்தைப் பறிக்கும் போதும் தனிப்பட்டவர்களின் நிலைகளைப் பற்றி அறிவிக்க முடியாது. எனவே அங்கீகாரம் பறிபோனபோது அக்கல்லூரியில் முதலாம் வருடம் உட்பட பயின்றுகொண்டிருந்த மாணவர்களும் பலியாகிவிட்டனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. அரசாங்கம் அங்கீகாரத்தைப் பறித்த போது அப்பொழுது கல்வி பயின்றுகொண்டிருந்த மாணவர்களும் அரசாங்க அங்கீகாரம் பெற்றவர்கள்தான் என்று கூறுவதற்கு நண்பர் காட்டும் அரசாங்க ஆதாரம் என்ன என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஆயுர்வேத வைத்திய சபைக்கு ஒரு ஆயுர்வேதக் கல்வி நிலையத்தையோ அது வழங்கும் பட்டங்களையோ அங்கீகரிக்க அதிகாரம் இல்லை.

வைத்தியர்களாகப் பதிவு செய்யும்போது டி. ஏ. எம். என்ற பட்டத்தை பதிவுப் பத்திரத்தில் போட்டுவிட்டிருந்தால் அதன் அர்த்தம் அங்கீகாரம் ஆகாது. 1961 ம் ஆண்டு 31 ம் இலக்க ஆயுர்வேதச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரியின் அங்கீகாரம் மீள ஆயப்படவில்லை. இதன் பின்பு லங்கா ஆயுர்வேதக் கல்லூரியால் வெளியேறிய ஒவ்வொருக்கும் வாய்மூலப் பரீட்சை நடத்தியே ஆயுர்வேத வைத்திய சபை ஆயுர்வேத (சித்த) சித்தவைத்தியராகப் பதிவு செய்தார்கள். ஆனல் 1961 ம் ஆண்டு ஆயுர்வேதச் சட்டம் அமுலுக்கு வருமுன்பு இந்த வாய்மூலப் பரீட்சை இல்லாமலே லங்கா ஆயுர்வேதக் கல்லூரிப் பட்டதாரிகளைப் பதிவு செய்தார்கள். இதிலிருந்தே விளங்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களைப் பெற்றவர்களை ஆயுர்வேதவைத்திய சபை தானகவே (Automatic Registralion) பதிவு செய்யும் என்று! நண்பர் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத (சித்த) பட்டதாரி. அவரின் பதிவு எப்படி நடந்தது என்று அவருக்குச் சொல்லவேண்டியதில்லை. ஆனல் ஒரு கல்லூரியை அங்கீகரிக்கவேண்டுமென ஆயுர்வேத வைத்திய சபை மந்திரிக்குச் சிபார்சு செய்ய 1961 ம் ஆண்டின் 31 ம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தின் 18 ம் பிரிவின் 1 ம் உபவிதி வசதியளிக்கிறது. அப்படி ஆயுர்வேத வைத்திய சபை சிபார்சு செய்திருந்தாலும் மந்திரி அதை ஒரு சட்ட மூலமாகவே வெளியிட முடியும்- இதை மேற்படி ஆயுர்வேதச் சட்டத்தின் 82 ம் பிரிவின் 3 ம் உபவிதி பின்வருமாறு காட்டுகிறது. ''மந்திரியால் கொண்டுவரப்படும் எந்த ஒரு சட்டமும், பாராளுமன்றத்தாலும் செனட்சபையாலும் அங்கீகரிக்கப்பட்டு அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாதவரையும் அதற்கு வலுவில்லை'',

விவாத மேடை

எனவே லங்கா ஆயுர்வேதக் கல்லூரியின் அங்கீகாரத்தை முறைப்படி அரசாங்க வர்த்தமானி மூலம் வழங்கிய இலங்கை அரசாங்கம் 1961 ம் ஆண்டின் 31 ம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்தை அமுல்படுத்தியதிலிருந்து இலங்கையில் நிர்வகிக்கப்பட்டு வந்த சகல பிரத்தியேக ஆயுர்வேதக் கல்லூரிகளும் 1941 ம் ஆண்டின் 17 ம் இலக்கச் சுதேச வைத்தியச் சட்டத்தின் மூலமும் அதன் துணைச் சட்டங்கள் மூலம் பெற்றிருந்த அரசாங்க அங்கீகாரத்தை இழந்தன. இதில் யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரியும் அடங்கும். 1961 ம் ஆண்டு 31 ம் இலக்க ஆயுர்வேதச் சட்டத்திற்கு அமைய சகல பிரத்தியேக ஆயுர்வேதக் கல்லூரிகளும் திரும்பவும் ஆயுர்வேதசபைக்கு அரசாங்க அங்கீகாரம்கோரி விண்ணப்பித்தன. அப்பொழுதும் யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரியை அரசாங்கம் அங்கீகரிக்க மறுத்துவிட்டது. எனவே 1961-ம் ஆண்டின் 31ம்இலக்க ஆயுர்வேதச்சட்டம் அமுலுக்கு வந்த 1961-ம் ஆண்டு ஆனி மாதம் 2-ந் திகதியிலிருந்து யாழ் லங்கா ஆயுர்வேதக்கல்லூரியின் அரசாங்கஅங்கீகாரம் சட்டப்படி நிறுத்தப்பட்டது என்பது தெளிவு. இத்திகதியின்பின்பு ஆயுர்வேதத்திணைக்களத்துடனே ஆயுர்வேதத் திணைக்களத்துடனே ஆயுர்வேத வைத்தியசபையுடனே பேச்சுவார்த்தைகளை நடத்திக் கடிதங்கள் மூலமாகவோ அல்லது வாய்ச்சொல்லு மூலமாகவோ (நண்பர் கூறியுள்ளது போல் '1962-ம் ஆண்டு கல்லூரியில் இருந்த மாணவர்கள் (முதலாம் வருடத்தில் பிரவேசம் எடுத்த மாணவர்கள் உட்பட) சகலரின் பட்டங்களையும் அரசு அங்கீகரித்தது') அங்கீகரித்திருந்தால் அது அரசாங்கத்தின் அங்கீகாரமாகாது. இதைநான் ஆயுர்வேதச் சட்டத்தின் (1961) 18-ம் பிரிவின் 1-ம் உபவிதியின்கீழும் 82-ம் பிரிவின் 3-ம் உபவிதியின் கீழும் மிக ஆணித்தரமாகக் கூறுகிறேன். **எனவே யாழ் லங்கா ஆயுர் வேதக் கல்லூரியில் அரச அங்கீகாரம் பெருத பட்டதாரிகள் விரிவுரையாளர்களாக இருக்கின்றனர் என்பதை சட்டங்களின் மூலம் வலியுறுத்தியுள்ளேன்.** இதை மறுப்பவர்கள் தயவுசெய்து கண்ணியமான முறையில் சட்டஆதாரங்களைக் காட்டி விவாதமேடையைத் தொடர்ந்து நடத்த முன்வரட்டும். மேலும் ஆயுர்வேத வைத்தியசபையால் 27-11-64 இல, எம். சி. 12 இலக்கங் கொண்ட கடிதமூலம் லங்கா ஆயுள்வேதக் கல்லூரியின் முகாமைச்சபைக்கு அனுப்பியிருக்கும் ஒருகடிதத்தில் 1-10-62 ஆம் ஆண்டுக்குமுன் லங்கா ஆயுர்வேதக் கல்லூரியிலிருந்து பட்டம்பெற்ற வைத்தியர்களின் பதிவுகுறித்துப் பரிசிலிக்கப்படும்' என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து விளங்குவதென்னவென்றல் 61-ம் ஆண்டு ஆயுர்வேதச்சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து மேற்படி கல்லூரிப் பட்டதாரிகளை அரசு பதிவுசெய்வதையே மறுத்துவந்துள்ளது என்பதாகும். இதைப்போன்ற மேலும் பல கடிதக்கொத்துக்கள் எம்மிடம் உண்டு.

அடுத்தவிடயம் மாணவர் போராட்டத்தைத் திருநெல்வேலிக்குப் போகச்சொன்னதைப்பற்றி நண்பரும். ஏன் சில மாணவர்களும் கூடப் பிழையாக விளங்கிக்கொண்டனர்போல் தெரிகிறது. நான் இதைக் கூறியதன் நோக்கம், புதியஆயுர்வேத (பல்கலைக் கழக)சட்டத்தின் (1976)படி ஆயுர்வேத திணைக்களத்துக்குக் கீழ் ஆயுர்வேதக்கல்லூரிகள்

(7-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில்— 'தமிழ் ஈழம்' சாத்தியமா?

மூ. ஏரம்பமூர்த்தி

இலங்கையில் காலத்துக்குக் காலம் அரசு செய்த அரசாங்கம் ஒவ்வொன்றும், தமிழருக்கும் தமிழுக்கும் இழைத்த அநீதிகள் அநந்தம். அதை ஆரும் மறுக்கமுடியாது. ஆனல் அந்த அநீதிகளை ஒழிக்க ஒரே வழி, தமிழ் ஈழம் அமைப்பது தானு என்பது, ஒவ்வொருதமிழனும் ஆற அமரச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விஷயம்.

### தமிழ் பேசும் மக்கள்

எங்கள் இலங்கையில் இன்று 135 லக்ஷம் மக்கள் வாழுகிறேம். இதில் தமிழர் 25 லக்ஷம்; முஸ்லீம்கள் 10 லக்ஷம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 10 லக்ஷம் தமிழரும் 4 லக்ஷம் முஸ்லீம்களும் 2 லக்ஷம் சிங்களவரும் வாழுகிறேம்.

வடகீழ் மாகாணங்க்ளில் 10 லக்ஷம் தமிழர் வாழ, ஏனைய ஏழு மாகாணங்களிலும், வியாபாரஞ் செய்வோர் ஆகவும் உத்தியோகம் புரிவோர் ஆகவும் தொழிலாளர் ஆகவும் 6 லக்ஷம் இலங்கைத் தமிழர் வாழுகிருர்கள். அதோடு, குடி உரிமை பெற்றவர் ஆகவும், குடி உரிமை பெற முடியாத நாடற்றவர் ஆகவும் 10 லக்ஷம் தமிழர் தோட்டத் தொழிலாளராக வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். இது போலவே இங்கே 4 லக்ஷம் முஸ்லீம்கள் வாழும் பொழுது வெளியே 6 லக்ஷம் முஸ்லீம்கள் வாழுகிருர்கள்.

ஆகவே வடகீழ் மாகாணங்களில் 14 லக்ஷம் தமிழ் பேசும் மக்கள் வாழ, வெளி மாகாணங்களில் 21 லக்ஷம் தமிழ் பேசும் மக்கள் வாழுகிருர்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தச் சுமாரான புள்ளி விபரங்களை மனதில் வைத்துக் கொண்டுதான், 'தமிழ் ஈழம்' பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறேம்.

எங்கள் வடகீழ் மாகாணங்களுக்கு அயலிலே, புத்தளம் தவிர, வேறு எந்தப் பகுதியிலும் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழவில்லை. புத்தளத்தில் தானும், மூன்று இன மக்களும் கலந்து வாழுகிருர்கள்; அவர்களிலும் முஸ்லீம்கள், தமிழரிலும் பார்க்கக் கூடிய தொகையினர்; அதனல் வடகீழ் மாகாணங்களோடு இணைய, அவர்கள் விரும்புவார்கள் எனச் சொல்லமுடியாது.

ஆகவே 'தமிழ் ஈழம்' என்பது; 21 லக்ஷம் தமிழ் பேசும் மக்களை வெளியே விட்டு, 14 லக்ஷம் மக்கள் மாத்திரம் சலுகைகள் அனுபவிக்க வழி கோலுகிற வடகீழ் மாகாணம் அளவில்தான் இருக்கமுடியும்!

### முஸ்லீம்களின் நிலை என்ன?

அத் தமிழ் ஈழத்தில், எப்பொழுதும் தமிழர் பெரும்பான்மையினராகவும், முஸ்லீம்கள் சிறுபான்மையினராகவும் இருப்பார்கள். பெரும்பான்மையினரான தமிழர்கள், சிறுபான்மையினரான முஸ்லீம்களை நியாயமாக நடத்துவார்கள் என முஸ்லீம்கள் நம்புவதற்கு ஓர் உத்தரவாதமும் இல்லை.

முஸ்லீம்கள், தமிழருடனும் சிங்களவருடனும் மதத்தாலும் கலாசாரத்தாலும் வேறுபட்டவர்கள். 4 லக்ஷம் பேர் தமிழருடன் வாழந்தாலும்; பெரும்பான்மையினரான 6 லக்ஷம் முஸ்லீம்களும் சிங்கள மொழியை லாகவமாகப்பேசுகிருர்கள்; சிங்கள மக்கள் இடையில் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள். அதனல் அவர்கள், சிங்களவருடன் மாறுபட்டுத் தங்களில் ஒரு பகுதியினர் பிரிந்து தனிநாட்டில் வாழுவதை விரும்பவில்லை.

அகில இலங்கை முஸ்லீம் லீக், இஸ்லாமிய சோஷலிச முன்னணி முதலான முஸ்லீம் இயக்கங்கள் முற்று முழுதாகப் பிரிவினையை எதிர்க்கின்றன. இஸ்லாமிய ஐக்கிய முன்னணி என்ற பெயருடன் தோன்றிய கிழக்கு மாகாண முஸ்லீம்கள் சிலர், கூட்டணியின் சார்பில் தமிழ் வாக்குகளைப் பெறலாம் எனும் நோக்குடன் இப்போ கூட்டணியில் கலந்து கொண்டார்கள். பொதுத் தேர்தல் காலத்தில் இது வழக்கமாக நடக்கும் வைபவம். சென்ற காலங்களில் தமிழரசுக் கட்சியால் பாராளுமன்றம் போன, மூதூர் முகமதலி அவர்களும், கல்முனை அஹம்மது அவர்களும் சில மாதங்களிலேயே கட்சியிலிருந்து நழுவியதை நாமறிவோம். ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சியுடன் ஒட்டித் திரிந்த- சில நாட்கள் செனெற்றிலும் காட்சி தந்த

''சிங்கள மொழி பேசும் ஒருகோடி சிங்கள மக்கள் இப்பரந்த உலகில் இந்தச் சின்னஞ்சிறிய இலங்கையில் மாத்திரம் வாழுகிறேம். 5கோடி தமிழர் உட்பட 60கோடி மக்கள் வாழும் பென்னம்பெரிய நாடான இந்தியா தேசம் எங்களை நோக்கித் தலைநிமிர்ந்து காத்து நிற்கிறது! தமிழர் வாழுகின்ற வட,கீழ் பகுதியை தனிநாடாகப் பிரித்து விட்டுவிட்டால் அது இந்தியத் தமிழ் நாட்டுடன் இணைந்து இலங்கை முழுவதையுமே விழுங்கி விடும்!''


இதுதான் சிங்கள மக்களின் சந்தேகம்!

பன்னெடுங் காலமாக,தமிழ் நாட்டிலிருந்து தமிழர் படையெடுத்து வந்து இலங்கையை ஆக்கிரமித்து இங்கே சோழ ஏகாதிபத்தியம் அமைத்த வரலாறு, அவர்களை அப்படிச் சந்தேகிக்க வைத்தது!

எங்களிற் சிலர், ''இலங்கையின் வட, கீழ் பகுதியும் இந்தியாவில் தமிழ்நாடும் இரு மாகாணங்களாக இணைந்து கூட்டாட்சி நடத்தலாம்'' என் ஒருபொழுது கருத்து வெளியிட்டதும், எங்கள் தலைவர்கள், தமிழக அரசின் தலைவர்களைச் சந்தித்தும, இரகசியப் பேச்சு வார்த்தை நடந்தியதும். விழா எடுத்ததும் ''சிங்கள மக்கள் கொண்டது

(7-ம் பக்கம் பார்க்க)

### வேலரும் மயிலரும்



வேலர்: திரைவானில் புதுமுகங்கள்தோன்றுகிறமாதிரி அரசியல் வானிலும் புதுமுகங்கள் தென்படுகின்றன.

மயிலர்: இரண்டும் நடிப்புலகம் தானே!

—சுந்தர்

# கிளர்ச்சி சந்தேகநபர் அப்புகாமி கைது!

கொழும்பு, புதன் 1971ம் ஆண்டுக் கிளர்ச்சி நடவடிக்கையின்போது பல கொலைகளையும், கொள்ளைகளையும் செய்ததாகக் கருதப்படுபவரும், இதுவரை மறைந்திருந்தவருமான அப்புஹாமி என்பவரைக் கலன்பிந்துனுவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர். 1971ல் இடம்பெற்ற கிளர்ச்சியைத் தொடர்ந்து இவர் நாடு பூராவும் தேடப்பட்டுவந்தார்.

1971ம் ஆண்டு சித்திரை மாதம் 5ந் திகதி ஒருவரைக் கொலைசெய்ததாகவும் அதே வருடம் டிசம்பரில் இடம்பெற்ற 2 பொலிஸாரைப் பலிகொண்ட பொலிஸ் தாக்குதல் சம்பவத்திற்கு முக்கிய காரணமாக இருந்ததாகவும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தில் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. விதானகேயும், கான்ஸ்டபிள் புஞ்சிமகலவும் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. [இ]

வலி. மேற்கு பயிர்ச்சேதம்:

# மக்கள் வங்கி அதிகாரிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், வியா. வடபகுதியில் அண்மையில் பெய்த பெருமழையினால் சங்கானை, பண்டத்தரிப்பு, நிற்சாமம் ஆகிய பகுதிகளில் உள்ள மிளகாய், வெங்காயம், புகையிலைச்செய்கை ஆகியன பெருமளவு சேதத்திற்குள்ளாகின.

இப்பகுதிகளில் நான்கு ஐந்து ரூபாவுக்கு விற்கப்பட வேண்டிய புகையிலை கன்றுகள் 50 சதமாக விற்கப்பட்டன. பிற ஊர்களில் இருந்து வந்தவர்கள் பெருமளவில் இவற்றைப் பெற்றுச் சென்றார்கள்.

இப் பெரும் சேதத்தால் ஏற்பட்ட நஷ்டத்தை சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. பொ. கதிர்வேலாயுதபிள்ளை, மக்கள் வங்கி அபிவிருத்தி உதவியாளர் திரு. ஈ. புவனேஸ்வரன், பண்டத்தரிப்பு பலநோக்கக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் திரு. ஆர். இராஜசுந்தரம், கடன் முகாமையாளர் திரு. சிற்றம்பலம், உபதலைவர் திரு. ஜேம்ஸ் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சேதத்தை நிவர்த்திசெய்வதற்கு அரசாங்கத்திடம் நஷ்டஈடுகோரியுள்ளது. இச் சங்கம் பண்டத்தரிப்பு, நிற்சாமப் பகுதி விவசாயிகளுக்கு ரூபா தொகை விவசாயக்கடன் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. [கா-இ]

# "சமுதாய அபிவிருத்திக்கு மாணவர்கள் உழைக்க வேண்டும்"

யாழ்ப்பாணம், வியா ''இளைஞர்களுக்கு, உரிய காலத்தில் வேலைத்திட்டம் உருவாக்கப்படல் வேண்டும். கல்விவயது வந்த பிள்ளைகளை பெற்றோர் வீட்டில் வைத்திருக்கக் கூடாது. பாலர் கல்விக் கழகங்கட்கு அனுப்புதல் வேண்டும்'' என்று பண்டிதை சேர் கனகசபை வித்தியாசாலை அதிபர் வித்துவான் வ. செல்லையா இளவாலையில் ''கலைமகள் பாலர் கழகத்'' திறப்பு விழாவில் சிறப்புரை நிகழ்த்தும்போது கூறினார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தேசிய உயர்கல்விச் சான்றிதழ் வகுப்பு கல்வித்துறைச் செய்திட்ட மாணவர்கள் இந்த இலவச பாலர் கல்விக் கழகத்தை ஆரம்பித்துள்ளனர். இம்மாணவர்கள் மற்றொரு பாலர் பாடசாலையை தெல்லிப்பழை கிழக்கு வீராங்கொடை என்னுமிடத்தில் நிறுவியுள்ளதும் குறிப்பிடத்தக்க தொன்றும்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. எஸ். நடராஜா கழகத்தை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் ''ஒருவர் சுதந்திரமாக தமது கல்வியைப் பெறவேண்டும் என்பதுவே செயல்திட்டத்தின் நோக்கமாகும். மாணவர்கள் சமுதாயத்துடன் பழகி சமுதாய விருத்திக்கு உழைக்க இது வழிகோலும். மகாஜனக்கல்லூரி கல்வித்துறைச் செயல் திட்ட மாணவர்களின் முன்மாதிரி அனைவராலும் பாராட்டத்தக்கது. நாட்டில் இத்தகைய பாலர் பாடசாலைகள் திறக்கப்படவேண்டும். நல் சிறைச்சாலைகள் மூடப்படும் நிலைமை ஏற்படும் என்றார்.

சைவப்புலவர் சு. செல்லத்துரை பேசுகையில்: ''நாட்டில் இருவகை பாலர் கழகம் அமைந்துள்ளது. ஒன்று படித்த வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலைவேண்டுமென பதற்காக அமைக்கப்பட்ட பாடசாலை. மற்றையது செயற்திட்டத்தினால் உருவாக்கப்பட்டது. பாடசாலைப் பருவத்திற்கு முன்மாணவர்கள் தன் விச்சையாகப் பயில்வதற்கே பாலர் பாடசாலை அமைக்கப்பட்டுள்ளது. கல்வி என்பது முதல் வாசித்தல் பின்பு எழுதுதல் ஆகும். இக்கழகத்தை ஆரம்பித்த கல்வித்துறைச் செய்திட்ட மாணவர்கள் ஒவ்வோர் வீட்டிலும் தயங்காமல் துணிந்து சென்று தங்களைப் பற்றிக்கூறி தேவையான விபரங்களை அறிந்தார்கள், அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்'' என்று கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் திரு. மு. சிவராசரத்தினம், பாலர் கழகவிசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியை செல்வி பிறேமா தர்மலிங்கம், கிராமசேவையாளர் திரு. மா. மகாதேவா, செய்திட்ட ஆசிரியர் பிரமஸ்ரீ கு. ச. இரத்தினேஸ்வர ஐயர் உட்பட மற்றும் பலர் சிறப்புரை நிகழ்த்தினர்கள்.

ஆனைக்கோட்டை நிவைப்பு:

# சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், வியா. ஆனைக்கோட்டையில் வீட்டுக்குத் தீ வைத்ததாகச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட மூவரும் நேற்று நடந்த அடையாள அணி வகுப்பில் இரண்டு சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர்.

யாழ். பதில்நீதவான் திரு. எஸ். கனகரத்தினம் முன்னிலையில் அடையாளஅணி வகுப்பு நடைபெற்றது.

சந்தேகநபர்களான கனேஸ்வரன், சண்முகலிங்கம் இரத்தினகுமார் ஆகியோர் அடையாளம் காட்டப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ. அன்ரனி, சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆகியோர் சந்தேகநபர்களைச் சாட்சிகள் பல சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாக இருந்ததால் அடையாள அணிவகுப்பு பயனற்றதென்று வாதாடினர்.

சந்தேகநபர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு, விசாரணை இம்மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (க-அ)

## 'கே. எம். பி. போட்டியிடுவார்'

கொழும்பு, புதன் எதிர்வரும் பொதுத்தேர்தலில் திரு கே. எம். பி. ராஜரத்ன வெலிமடைத் தொகுதியில் போட்டியிடமாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் தேர்தலில் குதிக்கலாம். தற்போதுள்ள சுதந்திரக்கட்சி எம். பி. திரு. ஆர். எம். பண்டார சுகவீனம் காரணமாக இம்முறை போட்டியிடமாட்டார்.

# தோட்டத்தில் கைகலப்பு!

கம்பளை, புதன் புசல்லாவ 'டெல்டா' தோட்டத்தில் இருகோஷ்டிகளுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பினால், அங்கு புதியவர்களைக் குடியேற்றுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட இத்தோட்டத்தில் வேறு இடத்தைச் சேர்ந்தவர்களை குடியமர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனை அத் தோட்டத்தில் நீண்டகாலமாக தொழில் செய்துவந்த தொழிலாளர்கள் எதிர்க்கவே இருகோஷ்டிகளுக்குமிடையில் கலகம் மூண்டது. இதன் விளைவாக பதினெரு பேர் சத்திக்குத்துக்கு இலக்காகி புசல்லாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பளையிலிருந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிறிச்சந்திரா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி நிலைமையை இப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். அங்கு அமைதிநிலவுகின்றது. இதனுடன் இங்கு புதியவர்களைக் குடியமர்த்தும் முயற்சியும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மகப்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மகப்பேற்றுக்கு 1000 டாலரும் வைத்தியசாலையில் ஐந்து நாட்களுக்குத் தங்கி 'அப்பெண்டிசைட்' போன்ற மிகச் சிறிய அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுவதற்கு 1200 டாலரும் கட்டணமாக அறவிடப்படுகின்றன.

ஒருதடவை டாக்டரிடம் சென்று மருந்து ஆலோசனை பெறுவதற்கு 175 டாலர்களைச் செலுத்த வேண்டியுள்ளது' என்றும் நாஷனல்ஸ்டார் எழுதுகின்றது.

1950ம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட மருத்துவ சிகிச்சைக் கட்டணங்களைக் காட்டிலும் இன்று அறவிடப்படும் கட்டணங்கள் பத்து மடங்குகளால் அதிகரித்துள்ளன வாம். (இ)

## காங்கிரஸுடன்'

(3 ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி துண்டிக்க முடியாத உறவைக் கொண்டிருப்பதால், தம்மால் தொடர்ந்தும் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகிக்க முடியவில்லை என்று திரு. பனர்ஜி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமது எதிர்காலம் பற்றி பின்னர் அறிவிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# ராஜினாமாவை வாபஸ் பெறுக!

## பேரின்பநாயகத்துக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா. அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து திடீரென ராஜினாமாச்செய்துள்ள திரு. இ. பேரின்பநாயகம் தமது ராஜினாமாவை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்று கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

திரு. இ. பேரின்பநாயகம் தமது பதவியைத் திடீரென ராஜினாமாச்செய்தது கூட்டணி வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இங்குள்ள தமிழர் கூட்டணித் தலைமைக் காரியாலயத்திற்கு நேற்று ஏராளமானோர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்களின் அதிர்ச்சியைத் தெரிவித்தனர்.

''எனது கொள்கைக்கு முரண்பட்டவர்கள் என இலட்சியப் பணிகளுக்குத் தொடர்ந்து முட்டுக்கட்டை போடுவதை இனிமேலும் என்னால் சகிக்கமுடியாது'' என்று கூறி திரு. இ. பேரின்பநாயகம் திடீரென வெளியேறியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்று கூறும் கூட்டணி வட்டாரங்கள், ''ராஜினாமாச் செய்வதற்கு இது நேரமல்ல. சோதனை ஏற்பட்டிருக்கும் இந்த நேரத்தில் அவர் தமது முடிவைப் புனராலோசனை செய்து ராஜினாமாவை வாபஸ் பெறவேண்டும்'' என்று யோசனை தெரிவித்துள்ளன.


# பவர்ஸ் தெளிகருவிகள்

(I) பவர்ஸ் தெளிகருவிகளை பாவித்துவரும் பாவனையாளர்கள் தங்கள் தெளிகருவிகளுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை தங்களுடைய பகுதி விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ள பெரும் கஷ்டத்துக்குள்ளாகிறார்களென்றும்

(II) உதிரிப்பாகங்கள் கையிருப்பில் இருக்கும்போது அவை கூடுதலான விலைக்கு விற்கப்படுவதாகவும்

எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மேற்கூறிய நிலைமைகளுக்குள்ளாகும் பவர்ஸ் தெளிகருவி பாவனையாளர்கள், கீழ்குறிப்பிட்டுள்ள உதிரிப்பாகங்களுக்கு எம்முடன் நேரடித் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| Fளொக்ஸ் | 10 K | ஸிம்ப்ளெக்ஸ் | |
| ஜரிஸ் | 14 K | மைக்ரனைஸர் | 35 F |
| ஹைரொனெட் | | ,, | 35 F&P |

உதிரிப்பாகங்கள் வி. பி. மூலமாகவோ அல்லது முற்பணம் செலுத்தினால் புகையிரதமூலமாகவோ அனுப்பிவைக்கப்படும்.

6215

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)
(ஜனத்திரள் அலை மோதுவதால் காட்சி நேரம் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகின்றோம்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி ∴ தேவிகா ∴ நாகேஷ் நடித்த
தினசரி 4 காட்சிகள்
அன்னை இல்லம்

RIO (Jaffna) Daily 4 Shows
KIRK DOUGLAS, RICHARD HARRIS IN
HEROES OF TELEMARK
(ரெலிமார்க் நகரத்து மாவீரர்)
இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது நாஸி ஜெர்மனிக்கு எதிராக தம் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற — தனித்துவத்தைப் பேணிக்காக்க — நோர்வே நாட்டு மக்கள் நடத்திய வீரமரணப் போராட்டத்தை சித்தரிக்கும் கதை.
(2 தினங்கள் மட்டும்)
From 21-5-77 Carry on Dick

REGAL (JAFFNA) Daily: 10-30 a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m.
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

வெலிங்டன் (யாழ். நகர்)
முத்துராமன் ∴ சுஜாதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
விஜயகுமார் — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

# அங்கீகாரம்—

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் இயங்கவில்லை. அது பல்கலைக்கழக முகாமைக்குச் சென்றுவிட்டமையால் பேச்சு வார்த்தைகளையோ கோரிக்கைகளையோ பல்கலைக்கழக முகாமையிடம் நடத்தினால் நன்மை பயக்கும் என்பதே. யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் வெளியிட்ட அறிக்கையிலும்கூட இதேகருத்தை அவரும் வலியுறுத்தியிருந்தமை இங்குகுறிப்பிடத்தக்கது.

அடுத்த விடயம் யாழ்ப்பாணத்தின் ஆயுர்வேதத் திணைக்கள உத்தியோகத்தராக கைதடி வைத்தியசாலைப் பொறுப்பாளரும் சுகாதார அமைச்சின் மேலதிகாரியின் காரியாலயம் நல்லூர்செட்டித் தெருவிலும இருப்பதாக நண்பர் கூறியிருந்தார். செட்டித் தெருவில் இருப்பது எஸ். எச். எஸ். காரியாலயம. இது சுகாதார அமைச்சுக் காரியாலயப் பிரிவல்ல. இது சுகாதார சேவைத் திணைக்களத்தின் பிராந்தியக்காரியாலயம. இங்குள்ள மேலதிகாரிக்கும் ஆயுள் வேதத்திணைக்களத்துக்கும எவ்வித தொடர்பும இடையாது. அடுத்தது கைதடி வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி ஆயுர் வேதத் திணைக்களத்தின் நிர்வாகசேவை அதிகாரியல்ல. அவர் ஒரு வைத்திய சேவை அதிகாரி. அவரால் அல்லது செட்டித்தெரு எஸ். எச். எஸ். காரியாலயத்தால் மாணவர்களுடைய போராட்டத்துக்கு ஒரு தீர்வைக்காண முடியுமாயின் ஏன் நண்பர் அவர்களிடம் செல்லாமல் கொழும்புநோக்கிப் பேச்சு வார்த்தைகளுக்குச் சென்று கொண்டிருக்கிறார்?

அடுத்தது, ஆயுர்வேதவைத்தியத்துக்கு இரண்டு கல்லூரிகள் வெவ்வேறு பட்டத்தை வழங்குவதன் மூலம் தென் இலங்கையில் பிழை செய்கிறார்கள் என்றார். சித்த வைத்தியத்தில் அக்கறையும், அபிவிருத்தி நோக்கையும்கொண்ட நாமும்–தமிழரும் ஏன்இரண்டு விதமான அதாவது அரச அங்கீகாரம் பெற்ற பட்டத்தையும் அரச அங்கீகாரம்பெறாத பட்டத்தையும் வழங்க வழிசமைத்து மாபெரும் தவறைத் தொடர்ந்து செய்யவேண்டுமா? இதை எழுதுவதன் மூலம் டி. ஏ. எம். பட்டங்களைப் பெற்றவர்களையும் இரு கூறுக்குகிறேன் என்று கூறி மற்றும் ஒரு வேண்டாத பிரச்னையை உருவாக்க முனைவது அறிவுள்ளவர்களுக்கு விளங்காமலிருக்க முடியாது. இது பட்டங்களைப் பெற்றவர்களுடைய குற்றமல்ல. இப்படியான பட்டங்களை வழங்கியவர்களதும், வழங்குபவர்களதும் குற்றமாதும்.

இறுதியாக ரியூறி டீ சில்வாக் கமிஷனைப்பற்றிப் பிரஸ்தாபித்துள்ள நண்பர் கமிஷன்களில் நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படுகிறார். நண்பர் நினைப்பதுபோல் எல்லாக் கமிஷன்களும் உறங்கு நிலை எய்துபவையல்ல. ரியூபி டி சில்வா கமிஷனும் உறங்கி விட்டது எனக் கூறுவதற்கு என்ன ஆதாரம் உண்டு. நாமும் கமிஷனின் அறிக்கையை விரைவில் வெளியிடுமாறு கேட்கலாம். முடிவை அறிவதால் மாணவர் போராட்டத்திற்கு மேலும் வலு ஏற்படலாம்.

-மருதையினார், டீ. ஏ. எம். எஸ்.,
செயலாளர்-அகில இலங்கைச் சித்த டீ. ஏ. எம். எஸ். பட்டதாரிகள் சங்கம்.

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி ஞாயிறு 10-30
சிவாஜி — பானுமதி
அம்பிகாபதி

வெஸ்லி (மாவிட்டபுரம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
கனிமுத்துப்பாப்பா

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
பாபு

# இலங்கையில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகம் மாத்திரம் அல்ல, முழுக்க முழுக்க உண்மையே'' என அவர்களை சிந்திக்குமாறு தூண்டியது!

இந்த நிலைமை வந்தபின், 'எந்தச் சமாதான வழிகளாலும் தமிழ்ஈழம் பெற்றெடுக்க முடியாது' என்பதைச் சிந்திக்கத் தெரிந்த சிந்தனையில் தெளிவுடைய எந்த ஒருதமிழ் மகனும் ஒப்புக் கொள்ளுவான்!

மசூர் மௌலானா இன்று யு. என். பி. யில் சங்கமமாகிவிட்டார்! இவைகளிலிருந்து முஸ்லீம்கள் பற்றி நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும் அல்லவா?

முஸ்லிம்கள், விரும்பாததமிழர் மாத்திரம் விரும்புகிற 'தமிழ்ஈழம்' எப்படி அமைய முடியும்? தமிழர்கள், முஸ்லிம்களிடையில் தமிழ்ஈழத்தைத் திணிக்கமுடியுமா?

அடுத்தது, நாம் விரும்பும் தமிழ் ஈழத்தை எப்படிப் பெறப்போகிறோம்?

## தமிழ் ஈழம் பெறும்வழிகள்

தமிழர் எல்லாரும் ஒற்றுமையாக ஒரே குரலில் கூவுவதால் தமிழ்ஈழம் வந்துவிடுமா? தமிழ் ஈழம் விரும்பும் தமிழர் அத்தனை பேரும் சேர்ந்து, 'தமிழ் ஈழம் தமிழ் ஈழ'மென்று மந்திரஞ்செபிப்பதால் தமிழ்ஈழம் தானாக வந்துகுதிக்குமா? மேடைகளில் தமிழில் முழங்குவதால் ஆண்ட பரம்பரையின் அவலக்குரல் அண்டமதிர அவனி எங்குமொலிப்பதால், 'தமிழ்ஈழம்' பயந்து ஓடிவந்து எம்முன் நிற்குமா?

பொதுத்தேர்தல்முடிந்தபின் எந்த ஒரு கட்சியும பெரும்பான்மை பெறாத சந்தர்ப்பத்தில், ஏதாவதொருகட்சியுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கம அமைக்க உதவுவதன் மூலம, அந்த அரசிடமிருந்து தமிழ் ஈழம் பெறமுடியுமா? ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கொம்யூனிஸ்ட்கட்சி ஆகிய எந்த ஒரு கட்சியாவது இலங்கையைத் துண்டுபோட ஒத்துக்கொண்டிருக்கிறதா? சிங்களப்பொது மக்கள் ஆதரிக்கிறார்களா?

## சிங்களவர் பிரிவினை விரும்பாத காரணம்

எந்தச் சிங்கள மகனும் பிரிவினையை விரும்பாமைக்குப்பிரதான ஒரு காரணமுண்டு. அச் சந்தேகத்தை அவர்கள் பல சந்தர்ப்பங்களில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

# சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

அகிலஇலங்கை திருப்புகழ் மன்றமும் அறிவுப்பொழில் பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடாத்தும் அறிவுப் போட்டிஒன்று இம்மாத இறுதியில்நடைபெறவிருக்கின்றது. இப் போட்டிக்கு முதலாம் பரிசாகதங்கப்பதக்கமும் மற்றைய 20 அதிர்ஷ்டசாலிகளுக்கு விலை உயர்ந்த பரிசில்களும் வழங்கப் படுமாம். (கெ-அ)

# பஸ்சேவை சீரில்லையாம்

யாழ்ப்பாணம், வியாழன்

தீவுப்பகுதி பஸ்சேவை இல. 777, 778, 780 ஆகிய சேவைகளில் ஈடுபடும் பஸ்வண்டிகள் கடந்த ஒரு வாரமாக தமது வழமையான சேவையை காலை 10–மணிமுதல்பிற்பகல் 3-மணி வரை ஒழுங்காகச் செய்வதில்லையாம். சிலவேளைகளில் 4-மணித்தியாலங்களுக்கு மேல் பிரயாணிகள் காத்திருக்க வேண்டியுள்ளதாம், இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறு தீவுப் பகுதி பஸ்பிரயாணிகள் சங்கக் காப்பாளர் திரு. [illegible] கோரியுள்ளார். (கெ-அ)

# அதிகவிளைச்சல்

யாழ்ப்பாணம், வியாழன்

இவ்வருடம் பெரும் போகத்தில் விவசாயிகளிடமிருந்து ஒரு கோடி புசல் நெல்லை நெல்சந்தைப்படுத்தும் திணைக்களம் கொள்முதல் செய்துள்ளது. இதனால் 40 லட்சம் புசல் அரிசியை உணவு இலாகாவுக்கு விநியோகிக்கமுடிந்ததாக தெரிவிக்கப்பட்டது. அதிகநெல்விளைச்சலுக்கு மகாவலி திசைதிருப்பும் திட்டத்தில் விவசாயிகள் கொண்ட ஆர்வமே முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. (கெ)


# மின்சார வசதிகள்

கல்முனை, புதன்

பொத்துவில் பகுதிக்கு விரைவில் மின்சாரவசதிகள்கிடைக்கவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (கி-நி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி (இரு வேடங்களில்)
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈட்ஸ்மன் கலர்)

"திருவருள்" புரியும் பக்திரசமான 2-வது வாரம்
வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்! இது ஞானவேல்!
யாவும் நிறைந்த தங்கவேல்! வருக! வருக!
நீமயிலேறி வருக!



திருவருளை தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளை காணாத கண்ணென்ன கண்ணோ

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்
கிருபானந்தவாரியார், நாகேஷ்,
சுந்தரராஜன், நடித்த
தேவரின்
திருவருள்
டைரக்ஷன்: ஆர். தியாகராஜன்
(ஈஸ்ட்மன் கலர்)

107-வது வெற்றித் தினம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ஈழநாடு

The EELANADU

காரைநகர் டிப்போ:

# இ. போ. ச. ஊழியர் வேலைநிறுத்தம் நீடிக்கிறது

யாழ்ப்பாணம், வியா

காரைநகர் இ. போ. ச. ஊழியர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம்செய்துவருகின்றனர்.

இவ்வேலைநிறுத்தத்தைசுமுகமாகத் தீர்த்து வைக்கும் பொருட்டு இ. போ. ச. வட பிராந்திய உதவிக்கட்டுப்பாட்டாளர் திரு. பற்குணமும் மற்றும் அதிகாரிகளும் தொழிற் சங்கவாதிகளுடன் முதலில் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்விஅடைந்ததைஅடுத்தே வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது. வேலைநிறுத்தம் நேற்று மூன்றுவது தினமாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. நேற்று மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இவ்வேலை நிறுத்தத்தினால் காரைநகர், வட்டுக்கோட்டை, சங்கரத்தை, நவாலி, அராலி ஆகிய இடங்களில் முற்றாக பஸ்சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. வலி மேற்குப்பகுதியின் ஏனைய சில இடங்களில் பிரயாணிகளுக்கு பஸ்களைப்பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

தண்ணீர்வசதி, படுக்கை வசதி, தேநீர்ச்சாலை, புதியபஸ் வண்டிகள், பொறியியல் அதிகாரிகள் மேல் நடவடிக்கை ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மகஜர்ஒன்றை காரைநகர் டிப்போ ஊழியர்கள் அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இக் கோரிக்கையின் பேரிலேயே இவ் வேலைநிறுத்தம் நடைபெறுகிறது (சுழி. நி-இ)

# "குறைந்த விலையில் திருக்குறள் நூல் கிடைக்கச்செய்ய வேண்டும்"

அரியாலை, புதன்

திருக்குறள் தொன்மைமிக்க நூலாகவும் என்றும் அழியாத பெரும் பொக்கிஷமாகவும் விளங்குகிறது. தமிழ் நாட்டில் இருப்பது போல் மிகக் குறைந்த விலையில் திருக்குறள் அச்சிட்டு விற்பனை செய்யப்பட வேண்டும். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் திருக்குறளைக் கற்றுத் தெரிந்திருக்க வேண்டும்."

இவ்வாறு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் உபதலைவர் திரு.பி.எசேக்கியல் உடுவில் தெற்கு கலாசோதி சனசமூக நிலைய மண்டபத்தில் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் ஆதரவில் நடைபெற்ற திருவள்ளுவர் தின விழாவில் பேசுகையில் கூறினார்.

நிலையத்தலைவர் திரு.ந. தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் நிலையச் செயலாளர் திரு. எஸ். தணிகாசலம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மகாசபைப் பொதுச் செயலாளர் திரு.எஸ். தில்லைநாதன் பேசுகையில், தமிழ் மாணவர்கள் திருக்குறளைக்கற்றுத் தெளிந்து கொள்ளக் கூடிய வகையில் தமிழ் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டு வென்பதை கல்விமான்கள் அரசின் கவனத்திற்கும் கொண்டுவர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். சொலமன் உபதலைவர் க.கிருஷ்ணராசா ஆகியோரும் இன்னும் பலரும் பேசினர். (அ)

## மரண அறிவித்தல்

திருமதி

அன்னப்பா ஜெகநாதன் செட்டியார்

காலமானார்

அன்னார் காலஞ்சென்ற ப. சு. ஜெகநாதன் செட்டியார் அவர்களின் அருமை மனைவியாரும், செந்தில் ராசா செட்டியார் (காந்தன் கூல் 'பார்'), திருமதி சண்முகரெட்ணம் கந்தசாமி செட்டியார், திருமதி ருக்மணி முத்துலிங்கம் செட்டியார், மகாதேவன் செட்டியார், (ஜெகநாதன் செட்டியார் அன் கோ.) திருமதி பூமதி ராஜேந்திரா செட்டியார் ஆகியோரின் அருமைத் தாயாரும், மகேசரெட்ணம், Dr. R. L. கந்தசாமி செட்டியார், S. R. முத்துலிங்கம் செட்டியார் (S. ராமையா செட்டியார் & சன்) சியாமளாதேவி, ராஜேந்திரா (சாம்பியா) ஆகியோரின் மாமியாருமாவர்.

அன்னாரின் பூதவுடல் 19 - 5 - 77 வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ். வில்லூன்றி மயானத்திற்கு சமக்கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

21, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

6225

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna; Telegram Eelanaadu Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.

# பட்டிருப்பில் ஐவர்போட்டி

கல்முனை, புதன்

பட்டிருப்புத் தொகுதியில் இம்முறைத் தேர்தலில் ஐந்து பேர் போட்டியிடுவார்கள். எஸ்.யூ.தம்பிராசா ஸ்ரீ.ல.சு. கட்சி சார்பிலும்- சிவகுருநாதன் ல.ச.ச.கட்சி சார்பிலும் பூ.கணேசலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பிலும் பரராஜசிங்கம் சுயேட்சையாகவும் போட்டியிடுவார்கள். இவர்களுடன் இன்னும் சிலர் சுயேட்சையாகப் போட்டியிடலாமெனத் தெரியவருகிறது.

இந்த வேட்பாளர்கள் தற்போது ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். (கி-நி)

# வழக்குகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வியா.

கடந்த ஆண்டு, தொழில் முறையீட்டு நீதிமன்றங்களில் 80, 162 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில் சட்டவிரோத வேலை நீக்கம், சேமலாபநிதி வழங்கப்படாமை போன்ற வழக்குகளே அதிகமானவை என்று தெரிவிக்கப்பட்டது. (கெ)

# விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஊர்காவற்றுறையில் எரிபொருட்கள் விற்பனை நிலையமொன்றை திறப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யு.எல். விஜயபாலா பணித்துள்ளார். பண்டிதர் கா. பொ. இரத்தினம், யாழ். சச்சேரி இணைப்புக்குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்ததன் பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது. (கெ)

# நல்லுறவை—

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் திரு. க. துரைரத்தினம், திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரைக் கொண்ட உபகுழுவொன்றை நியமித்துள்ளது.

இந்தக் குழு நியமனம்பற்றி கம்யூனிஸ்ட்கட்சி யாழ் கிளைச் செயலாளருக்கு எழுதிய ஒரு கடிதத்தில், "தங்கள் கிளையோடு மேலும் தொடர்பு கொண்டு இரு இயக்கங்களுக்கிடையே நல்லுறவு வளர்வதற்கான வழிவகைகளை நாடும்பொருட்டு திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, திரு. க. துரைரத்தினம் திரு வி. தர்மலிங்கம் ஆகிய மூவரையும் கூட்டணியின் சார்பில் நியமித்துள்ளோம்" என்று தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில்

# நாளை நடக்கும் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியா

நாளை 20ம் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் தந்தை செல்வாவின் இரங்கற் கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியசுவாமிகள், அருட்திரு ஜெயசீலன் அடிகள், மண்கும்பான் பள்ளிவாசல் பிரதம தர்மகர்த்தா உட்படப்பல சமயப்பெரியார்கள் இரங்கலுரை நிகழ்த்துவர்.

செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரி உட்பட இளைஞர் பேரவை, மகளிர் பேரவை உறுப்பினர்கள் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றுவர்.

கூட்டமுடிவில் "செல்வா பிறந்திலரேல்" என்னும் தலைப்பில் அமரர் செல்வாவின் வாழ்க்கை வரலாற்றை வில்லிசைப் பாடலாக கலைவாணர் நாடகமன்றத்தினர் வழங்குவார்கள். (கி-அ)

மாருதி கம்பனியிலிருந்து

# தஸ்தாவேஜுகளை அகற்ற முயன்றாராம் சஞ்சய்

## தொழிலாளர்கள் முறியடித்தனர்

புதுடில்லி, மே.18

மாருதி கம்பனியிலிருந்த பல முக்கிய தஸ்தாவேஜுகளை இரகசியமாக எடுத்துச் செல்ல முயன்ற திருமதி காந்தியின் புதல்வர் சஞ்சய் காந்தி தொழிலாளர்களின் எதிர்ப்புக் காரணமாகவே வெறுங் கையுடன் திரும்பிச் சென்றாராம்.

சஞ்சய் காந்தியுடன் வந்திருந்த ஆயுதம் தாங்கி ஒருவரினால் அக்கம்பனியிலிருந்த காவலாளிகள் பயமுறுத்தப்பட்டும் அவர்களால் இந்த முயற்சி கைகூடவில்லையாம்.

இச் செய்தியை 'சமாச்சார்' செய்தி ஸ்தாபனம் வெளியிட்டது. (இ)

இளைஞர் பேரவை

# பொதுச்சபை 29-ம்திகதி கூடுகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

இளைஞர்பேரவை பொதுச்சபை எதிர்வரும் 29-ந் திகதி யாழ்ப்பாணம் விடுதலைக்கூட்டணிக் காரியாலயத்தில் கூடுகிறது.

இதில் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் இளைஞர் பேரவையின் பங்கு பற்றி ஆராயப்படும்.

இளைஞர் பேரவை உறுப்பினர்கள் தேர்தலில் வேட்பாளராக நிற்கும் பட்சத்தில் அவர்கள் பேரவையிலிருந்து விலக்கப்பட வேண்டுமெனும் தீர்மானமும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும். (கி-அ)

# வேட்பாளர்கள் கலந்து கொள்வர்.

யாழ்ப்பாணம், வியா,

இம்மாதர்கடைசியில் ஊர்காவற்றுறையில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர், தமது எழுச்சிக்கூட்டத்தை பண்டிதர் திரு க. பொ. இரத்தினம் தலைமையில் நடாத்தவுள்ளனர். இக் கூட்டத்தின் வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த கூட்டணி வேட்பாளர்களும் இளைஞர் பேரவை உறுப்பினர்களும் கலந்து உரையாற்றுவார்கள். (கெ)

# டி.ஐ.ஜி.—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் டிக்கியில் அடைக்கப்பட்ட சாரதியின் மரணம் ஆகியவற்றை நீதிபதி குறிப்பிட்டார்.

இணுவில் இரட்டைக்கொலை தொடர்பான ஸ்தல விசாரணை நடத்திய நீதிபதி திரு. ஜெகரட்ணம் 'கொலைகள்' எனத் தீர்ப்பளித்தார்.

பெரும் பரபரப்பூட்டியுள்ள இந்த இரட்டைக் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பெரேராவினதும், காங்கேசன்துறை தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் டபிள்யு. குணதிலகாவினது உதவியுடனும் காங்கேசன்துறை ஏ. எஸ். பி. ஸ்மித் சில்வா தொடர்ந்து தீவிர புலன்விசாரணை புரிகின்றார்.

மேல்விசாரணையை நீதிபதி எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைத்துள்ளார்.

இக்கொலைகள் தொடர்பான தகவல் காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு தொலைபேசி மூலம் கிடைத்ததும் றிசேவ் சார்ஜண்ட் சிங்காரவேலு மாசிலாமணி தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டருக்கும், ஏ. எஸ். பி.க்கும் அறிவித்ததையடுத்து பொலிஸ் கோஷ்டிஒன்று 'டாக்கில்' ஸ்தலத்திற்கு விரைந்து வந்திருந்தது. (உ)

# இரு கான்ஸ்—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சுமார் பத்தரை மணியளவில் மல்லாகம் நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினம் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டுச் சென்றார்.

வாகனங்கள் யாவும் [illegible] விடப்பட்டன. காங்கேசன் துறைவீதிப் போக்குவரத்துக்கள் யாவும் சிலமணிநேரத்துக்கு கோண்டாவில் சந்தியாலும் மருதனமடம் சந்தியாலும் திருப்பிவிடப்பட்டது.

நண்பகலில் இருவரது சடலங்களும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி பிரேதச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டது.

மல்லாகம்நீதிபதி விசாரணை நடத்தினார்.

# தேர்தலில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

10 நாட்களுக்கு முன்னர் தமது திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும்; இவர்களுக்கு சம்பளமற்ற விடுமுறையாக 3 மாதங்களுக்கு லீவு வழங்கப்படும். தேர்தலில் போட்டியிட்டு கட்டுப்பணத்தை இழப்பின் தமது பதவியையும் இழப்பார்கள் என்று உள்நாட்டு நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. (கெ)

## மரண அறிவித்தல்

சரவணமுத்து இராமநாதன்

ஊரெழுவைச் சேர்ந்த ச. இராமநாதன் காலமானார். (யாழ்ப்பாணம் பொது வேலைப்பகுதி பொறுப்பதிகாரி) இவர் புஷ்பராணியின் அன்புக்கணவரும், சுகந்தி, சிவகுமார், சிறீதமயந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும், மகாதேவி, நாகரத்தினம், 'புனிதவதி', பூலோகநாதன் (மருத்துவ மாணவர், கொழும்பு), கையிலைநாதன் (சீமெந்து தொழிற்சாலை), செல்வி பாலாம்பிகை ஆகியோரின் சகோதரரும், டாக்டர் முத்துதம்பி, தபாலதிபர் தியாகராசா, சிவசுப்பிரமணியம் (சச்சேரி, அனுராதபுரம்) ஆசிரியர் தனேஸ்வரன், பரமநாதன் (இ. போ. ச) சண்முகநாதன் (சீமெந்து தொழிற்சாலை), கணேசமூர்த்தி (நாரந்தனை நீர் விநியோகப்பகுதி) கணேஸ்வரன் (உரும்பிராய்-ஊரெழு பட்டினசபை) மலேஷியா பகவதி பத்மநாதன், சூரியகுமாரி சிவஞானம், செல்வி உதயகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக இன்று 19-5-77 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஊரெழு பொக்கணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

6224